**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி வட்டம், விழுப்புரம் மாவட்டம்**

**முன்னிலை - திருமதி. பி. வித்யா, எல்.எல்.எம்.,**

**நீதித்துறை நடுவர், செஞ்சி,**

**2026 -ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17 - ஆம் நாள், வெள்ளிக் கிழமை**

**ஆண்டு பட்டிகை வழக்கு எண்.173/2018**

**CNR.No.TNVP18 - 000433 – 2018**

| | | |
|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்றத்தின் குற்ற எண். (Name of the Police Station and Crime Number of the Offence) | காவல் உதவி ஆய்வாளர் நல்லான்பிள்ளைபெற்றாள் காவல் நிலையம்.<br>குற்ற எண். 88/2016 |
| 2. | எதிரிகளின் பெயர் (Name) | A1) குமரன், வயது - 70,<br>த/பெ. குள்ளமேஸ்திரி,<br>A2) கிருஷ்ணமூர்த்தி, வயது -45<br>த/பெ. குமரன்,<br>A3) பூபாலன், வயது -41,<br>த.பெ. குமரன்,<br>A4) ராமச்சந்திரன், வயது -37,<br>த.பெ, குமரன்,<br>A5) அம்சவள்ளி வயது 55. க.பெ. குமரன்<br>மேற்படி நபர்களின் வசிப்பிடம்<br>உளியம்பட்டு கிராமம், செஞ்சி வட்டம், விழுப்புரம் மாவட்டம். |
| 3. | எதிரிகளின் தந்தை பெயர் (Father's Name) | |
| 4. | எதிரிகளின் தொழில் (Occupation) | |
| 5. | எதிரிகளின் முகவரி (Residence) | |
| 6. | எதிரிகளின் வயது (Age) | |
| 7. | Details of absondance of the accused | --- |
| 8. | குற்ற நிகழ்வு நாள் (Occurrence) | 06.06.2016 |
| 9. | புகார் தேதி (Complaint) | 06.06.2016 |

| | | |
|---|---|---|
| 10. | எதிரிகள் கைது செய்யப்பட்ட தேதி<br>(Apprehension) | A1 –06.06.2016<br>A2 முதல் A5 வரையிலான எதிரிகள் – மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் C.M.P.No.14138/2016, 15.07.2016 - ல் முன் பிணையம் பெற்று சென்றுள்ளார்கள். |
| 11. | எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள்<br>(Release on Bail) | A2 -08.06.2016 |
| 12 | Period of Bail | A2 - 3 நாட்கள் |
| 13 | Commitment | --- |
| 14 | Date of Questioning u/s 228 (or) 240 (or) 246 (or) 251 | 27.05.2022 |
| 15 | விசாரணை ஆரம்பிக்கப்பட்ட தேதி<br>( Commencement of Trial) | 02.09.2022 |
| 16 | Date of Examination in Chief and Cross Witnesses | Chief / Cross<br>PW1 02.09.2022 02.09.2022<br>PW2 12.07.2023 12.07.2023<br>PW3 22.04.2024 22.04.2024<br>PW4 17.07.2025 17.07.2025<br>PW5 17.07.2025 17.07.2025<br>PW6 01.08.2025 01.08.2025<br>PW7 07.10.2025 07.10.2025<br>PW8 12.11.2025 12.11.2025 |
| 17 | விசாரணை முடிக்கப்பட்டது தேதி<br>(Closure of Trial) | 12.11.2025 |

| | | |
|---|---|---|
| 18 | Date of examination of accused u/s. 313 Crpc (or) 351 of BNSS | 27.11.2025 |
| 19 | தண்டனை அல்லது உத்தரவு | 17.04.2026 |
| 20 | Details of Victim Compensation Order | --- |
| 21 | Grant of Stay by Superior Courts and their Results. | --- |
| 22 | எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் | 1 -ம் எதிரியின் மீது இ.த.ச. பிரிவுகள் 147, 324, 506(2)-ன் கீழும், 2 முதல் 5 வரையிலான எதிரிகளின் மீது இ.த.ச.பிரிவுகள் 147, 324 -ன் கீழும், குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. |
| 23 | சட்டப்பிரிவுகள் | இ.த.ச.பிரிவுகள் 147, 324, 506(2) |
| 24 | தீர்ப்புரை | 1 ம் எதிரி இ.த.ச பிரிவுகள் 147, 324, 506(ii)-ன் கீழும், 2 முதல் 5 வரையிலான எதிரிகள் இ.த.ச. பிரிவுகள் 147, 324 கீழும் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து, எதிரிகளை கு.வி.மு.ச. 248(1)-வது பிரிவின் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. |

இந்த வழக்கானது கடந்த 12.09.2018 - ம் தேதி கோப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, இறுதியாக 17.04.2026 - ம் தேதி இந்நீதிமன்ற விசாரணைக்காக வந்தபோது, அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை-2 செஞ்சி அவர்களும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.ராஜவேலு, B.A., B.L., அவர்களும் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகளையும் கேட்டறிந்தும்,

இருதரப்பிலும் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணங்கள் பரிசீலினை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## <u>தீர்ப்புரை</u>

**<u>அரசு தரப்பு வழக்கு :-</u>**

கடந்த 06.06.2016-ம் தேதி காலை சுமார் 07.00 மணிக்கு சாட்சி-2 (உலகநாதன்) உளியம்பட்டு கிராமத்தில் உள்ள தனது மெத்தை வீட்டின் வெளியே இருந்த லைட்டை நிறுத்திவிட்டு வெளியே வந்த போது எதிரிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து சென்று 1-ம் எதிரி சாட்சி-2(உலகநாதனை) இரும்பு கம்பியால் தலையில் அடித்து சொற்பகாயத்தை ஏற்படுத்தியும், இரும்பு கம்பியை காட்டி உன்னை கொலை செய்யாமல் விடமாட்டேன் என்று மிரட்டியுள்ளார். 2, 3 மற்றும் 4 எதிரிகள் சாட்சி-2 ஐ தடியால் முதுகின் மேல் அடித்து சொற்பகாயத்தை ஏற்படுத்தியுள்ளார்கள். 5-ம் எதிரி சாட்சி-3(இந்துமதியை) தடியால் இடது கையின் மேல் அடித்து சொற்ப காயத்தை ஏற்படுத்தியுள்ளார். மேற்படி குற்றங்களுக்காக, 1 -ம் எதிரியின் மீது இ.த.ச. பிரிவுகள் 147, 324, 506(2)-ன் கீழும், 2 முதல் 5 வரையிலான எதிரிகளின் மீது இ.த.ச.பிரிவுகள் 147, 324 -ன் கீழும், தண்டிக்கதக்க குற்றம் புரிந்ததாக நல்லான்பிள்ளைபெற்றாள் காவல் நிலைய உதவி ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2.** எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜரான பின்பு கு.வி.மு.ச பிரிவு 207- ன் படி வழக்காவணங்களின் நகல்கள் இலவசமாக வழங்கப்பட்டது.

**3. குற்றச்சாட்டுகள்** :-

வழக்காவணங்களின் அடிப்படையில் 1-ம் எதிரியின் மீது இ.த.ச. பிரிவுகள் 147, 324, 506(2)-ன் கீழும், 2 முதல் 5 வரையிலான எதிரிகளின் மீது இ.த.ச.பிரிவுகள் 147, 324 -ன் கீழும் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டு

குற்றச்சாட்டுகள் குறித்து எதிரிகளுக்கு படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கப்பட்டு குற்றத்தை ஒத்துக்கொள்ளுகிறீரா? அல்லது விசாரணையை வேண்டுகிறீரா? என வினவப்பட்டது. எதிரிகள் குற்றச்சாட்டுக்களை மறுத்தனர்.

எனவே, அரசு தரப்பில் சாட்சிகளை ஆஜர் படுத்தப்படவேண்டுமென்று உத்தரவிடப்பட்டது.

**4. அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம் பின்வருமாறு**:-

அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.8 வரையிலான சாட்சிகள் விசாரிக்கபட்டுள்ளார்கள். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**அ.சா.1 (கிருஷ்ணமூர்த்தி)** இவர் இவ்வழக்கின் சம்பவத்தை பற்றியும், புகார் மனு கொடுத்தது பற்றியும் சாட்சியம் அளித்துள்ளார். இவர் மூலம் **அ.சா.ஆ.1 (புகார் மனு**) குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**அ.சா.2 (உலகநாதன்)** மற்றும் **அ.சா.3 (இந்துமதி)** இவர்கள் இவ்வழக்கின் காயமடைந்த சாட்சியாவார்கள்.

**அ.சா.4 (பச்சைமுத்து), அ.சா.5(சக்கரவர்த்தி)** ஆகியோர்கள் இவ்வழக்கின் கண்ணுற்ற சாட்சிகள் ஆவார்கள்.

**அ.சா.6 (ரவி)** இவர் இவ்வழக்கின் பார்வை மகசர் சாட்சி ஆவார். இவர் மூலமாக **அ.சா.ஆ.2 (பார்வை மகசரிலுள்ள 1வது கையொப்பம்)** குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**அ.சா.7 (தாகூர் - மருத்துவர்)** இவர் இவ்வழக்கில் காயம் பட்டு வந்த நபர்களுக்கு சிகிச்சை அளித்தது பற்றியும், காயச்சான்று வழங்கியது பற்றியும் சாட்சியம் அளித்துள்ளார். இவர் மூலம் **அ.சா.ஆ.3 (அ.சா.2-ன் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று)** மற்றும் **அ.சா.ஆ.4 (அ.சா.3-ன் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று)** குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**அ.சா.8 (ஆறுமுகம் - உதவி ஆய்வாளர்)** இவர் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி ஆவார். இவர் மூலம் **அ.சா.ஆ.5 (முதல் தகவல் அறிக்கை) அ.சா.ஆ.6 (பார்வை மகசர்) மற்றும் அ.சா.ஆ.7 (மாதிரி வரைபடம்)** ஆகியவைகள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

அரசு தரப்புகள் விசாரிக்கப்பட்ட பின்பு, அவர்களது சாட்சியத்தில் எதிரிகளுக்கு பாதகமான பகுதிகள் குறித்து கு.வி.மு.ச பிரிவு 313 (1)(ஆ) – கீழ் வினவிய போது, எதிரிகள் அந்த சாட்சியங்களை மறுத்தார்கள்.

**5. எதிரிகள் தரப்பு வழக்கு:-**

அவர்கள் மீது பொய் வழக்கு புனையப்பட்டுள்ளது என்பது எதிரிகள் தரப்பு வழக்கு. ஆனால், எதிரிகள் அவர்கள் தரப்பில் எந்த வித சாட்சியங்களும் இல்லை என குறிப்பிட்டார்கள்.

**6. இருதரப்பு வாதங்கள் :-**

அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் அவர்கள் அவருடைய வாதத்தில், அ.சா.1 (கிருஷ்ணமூர்த்தி) இவ்வழக்கின் புகார்தாரர் என்றும், அவர் கொடுத்த புகார் மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் மூலம் வழக்கை அரசு தரப்பு நிரூபித்துள்ளதாகவும் எனவே, எதிரிகளை தண்டிக்குமாறு வாதிட்டார்.

எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடும்போது, அரசு தரப்பில் குறிப்பிட்டுள்ளது போல், குற்றம் நிகழவில்லை என்றும், அரசு தரப்பு அதன் வழக்கை தகுந்த சாட்சிய, சான்றாவணங்களின் படி நிரூபிக்க தவறி உள்ளது என்றும், அ.சா.1 கொடுத்த பொய் புகாரின் அடிப்படையில் அரசு தரப்பில் எதிரிகள் மீது புனையப்பட்ட பொய்யான வழக்கு இது என்றும், எனவே, எதிரிகளை இவ்வழக்கிலிருந்து விடுவிக்குமாறு வாதிடப்பட்டது.

**7. தீர்வுக்குரிய பிரச்சனை:-**

**(அ) எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பு சந்தேகத்திற்கு அப்பாற்ப்பட்டு நிரூபித்துள்ளதா?**

**(ஆ) ஆம், எனில், எதிரிகளுக்கு வழங்கப்பட வேண்டிய தண்டனை என்ன?**

**<u>8. தீர்வு: -</u>**

**(8.1)** இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. அ.சா.1 (கிருஷ்ணமூர்த்தி) இவ்வழக்கின் புகார்தாரர் ஆவார். மேற்படி அவர் அளித்த புகார் மனுவின் அடிப்படையில், எதிரிகள் மீது அ.சா.ஆ.5 (முதல் தகவல் அறிக்கை) பதிவு செய்யப்பட்டுள்ளது. புகார் மனுவில் உள்ள விவரங்களை பொறுத்து அ.சா.1 அவரது முதல் விசாரணை சாட்சியத்தில், கடந்த 06.06.2016 அன்று காலை 07.00 மணியளவில் அவர் வீட்டில் இருந்த போது அவரது மகன் உலகநாதன் மற்றும் அவரது மனைவி இந்துமதி ஆகியோர்கள் வீட்டிற்கு வந்து, அவரிடம் அவர்கள் புதியதாக கட்டிக் கொண்டிருந்த வீட்டினிடம், வந்து எதிரிகள் ஐவரும் பிரச்சனை செய்து அடித்து விட்டதாக கூறினார்கள் என்றும், அவர்களை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து விட்டு, வழக்கு தொடர்பாக நல்லான்பிள்ளைபெற்றாள் காவல் நிலையம் சென்று எதிரிகள் மீது புகார் அளித்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

**(8.2)** மேற்படி அ.சா.1 எதிரிகள் தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். சம்பவ நாள் மற்றும் நேரம் தொடர்பாக அ.சா.1-னிடம் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. மேற்படி அ.சா.1ன் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை சாட்சியத்தை முழுமையாக பரிசீலனை செய்ததில், அ.சா.1-ற்கும் எதிரிகளுக்கும் இடையே நிலம் சம்பந்தமாக முன் விரோதம் இருந்து வந்தது என்பதும் மற்றும் வழக்கு சம்பவத்தன்று அ.சா.1ன் தரப்பினர்கள் மீது வழக்கு

பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதும் புலப்படுகிறது. மேற்படி சங்கதியை இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.8 அவரது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் ஒப்பு கொண்டுள்ளார். அ.சா.1 அவரது சாட்சியத்தில், எதிரிகள் அவரது மகனை தாக்கிவிட்டதாக சாட்சியம் அளித்த போதிலும், அவருக்கும் எதிரிகளுக்கும் இடையே முன் விரோதம் இருந்து வருவதால் அவரது சாட்சியத்திற்கு ஒத்துரைப்பு சாட்சியம் அவசியமாகிறது. இவ்வழக்கில் காயமடைந்த சாட்சிகள் என அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர்கள் விசாரிக்கப்பட்டுள்ளனர். மேற்படி நபர்களும் அவர்களது சாட்சியத்தில் எதிரிகள் ஐவரும் அ.சா.2 ஐ தாக்கியதாக சாட்சியம் அளித்துள்ளார்கள். குறுக்கு விசாரணையின் போது, அவர்களும், அவர்களது சாட்சியத்தில், அவர்களுக்கும் அ.சா.1ன் தரப்பினர்களுக்கும் இடையே முன் விரோதம் இருந்து வந்தது என்பதையும், இதே சம்பவத்தன்று அவர்கள் எதிரிகளை தாக்கியதாக அவர்கள் மீதும் வழக்கு பதிவு செய்யப்பட்டு, அது நிலுவையில் உள்ளது என்பதையும் ஒப்புக் கொண்டுள்ளார்கள். மேற்படி அ.சா.1 முதல் அ.சா.3 ஆகியோர்கள் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள் என்பது அவர்களது சாட்சியத்திலிருந்து புலப்படுகிறது. எனவே, அ.சா.1 முதல் அ.சா.3 ஆகியோர்களின் சாட்சியத்திற்கும் ஒத்துரைப்பு சாட்சியம் அசியமாகிறது.

**(8.3)** இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சிகள் என அ.சா.4 மற்றும் அ.சா.5 ஆகியோர்கள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். மேற்படி சாட்சிகளில் அ.சா.4 அவரது சாட்சியத்தில், சுமார் 7 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் காலை 07.00 மணியளவில் எதிரிகளும் அ.சா.1ன் குடும்பத்தினரும் சண்டையிட்டு கொண்டிருந்தனர் என்றும்,

இரு தரப்பினரும் மாறிமாறி அடித்துக் கொண்டனர் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி அ.சா.4 ன் சாட்சியத்திலிருந்து இரு தரப்பினர்களும் சம்பவத்தன்று சண்டையிட்டுள்ளார்கள் என்பது புலப்படுகிறது. மற்றொரு கண்ணுற்ற சாட்சியான அ.சா.5 அவரது சாட்சியத்தில் சம்பவத்தை பார்க்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார். குற்ற வழக்குகளை பொறுத்த மட்டில் எதிரிகளின் மீதான குற்றத்தை அரசு தரப்பு தகுந்த சாட்சிய சான்றாவணங்களின் மூலம் நியாமான சந்தேகங்களுக்கு அப்பாற்பட்டு, நிரூபிக்க வேண்டியுள்ளது.

**(8.4)** Police Standing Order-ன் விதி 588-ன் படி ஒரு குற்ற சம்பவத்தில் இரு தரப்பினர்களுக்கிடையே பிரச்சனை ஏற்பட்டால் அதை விசாரிக்கும் புலன் விசாரணை அதிகாரியானவர் உண்மையில் யார் Aggressor என்பதை விசாரித்து அவர்கள் மீது மட்டும் தான் வழக்கு பதிவு செய்ய வேண்டும். ஒரு வேளை இரு தரப்பினர்களும் குற்றம் இழைத்திருக்கும் பட்சத்தில் அவரவர்கள் செய்த குற்றத்திற்கு ஏற்ப வழக்கு பதிவு செய்யப்பட்டு ஒரு வழக்கின் விவரம் மற்றும் ஆவணங்களை மற்றொரு வழக்கிலும் தாக்கல் செய்து குற்றவாளி யார் என்பதை நீதிமன்றம் தீர்மானிக்க ஏதுவாக இறுதி அறிக்கையை தாக்கல் செய்ய வேண்டும். இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.9 மேற்குறிப்பிட்ட இரண்டு செயல்களையும் செய்ய தவறியுள்ளார். ஒரே குற்ற சம்பவம் தொடர்பாக இரு வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதால் இந்நீதிமன்றம் மற்றொரு வழக்கு கோப்பான சி.சி. 172/2018-ஐ பரிசீலனை செய்தது. இந்த வழக்கில் அரசு தரப்பு சாட்சிகளான அ.சா.1 முதல் அ.சா.3 ஆகியோர்கள் தான் மேற்படி வழக்கின் எதிரிகள்

ஆவர்கள். மேற்படி, வழக்கு கோப்பை முழுமையாக பரிசீலனை செய்ததில் இவ்வழக்கின் அரசு தரப்பு சாட்சிகள் எதிரிகளை அடித்ததாக சாட்சியமளித்துள்ளார்கள். இரு வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்ததில் இரு தரப்பினர்களுக்கும் இடையே 06.06.2016 அன்று காலை 06.30 - 07.00 மணியளவில் பிரச்சனை ஏற்பட்டுள்ளது என்பது புலப்படுகிறது. எனினும், இந்த பிரச்சனையானது எந்த தரப்பினரால் ஏற்பட்டது மற்றும் Aggressor யார் என்பதை கண்டறிய இயலவில்லை. அது தொடர்பாக புலன் விசாரணை அதிகாரியும் எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை. குற்ற வழக்குகளை பொறுத்த மட்டில் எதிரிகளுக்கு சாதகமான ஒரு சூழல் நிலவுமேயானால் அதனை அவர்களுக்கு சாதகமாக்கி சந்தேகத்தின் பலனை அவர்களுக்கு அளிக்க வேண்டும் என்பது விதியாகும். இவ்வழக்கின் எதிரிகள் தான் Aggressor என்பதை அனைத்து வித சந்தேகங்களுக்கும் அப்பாற்பட்டு அரசு தரப்பு நிரூபிக்க தவறியுள்ளதாலும், வழக்காவணங்களின் அடிப்படையில் எதிரிகள் தான் Aggressor என்பதை தீர்மானிக்க இயலாத காரணத்தினாலும், சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து அவர்களை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்ய இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக** - 1ம் எதிரி இ.த.ச பிரிவுகள் 147, 324, 506(ii)-ன் கீழும், 2 முதல் 5 வரையிலான எதிரிகள் இ.த.ச. பிரிவுகள் 147, 324 கீழும் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து, எதிரிகளை கு.வி.மு.ச. 248(1)-வது பிரிவின் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. மேலும், எதிரிகள் இந்நீதிமன்றத்திற்கு எழுதி

கொடுத்திருக்கும் பிணைமுறி ஆவணங்கள் மேல்முறையீட்டுக் காலத்திற்குப் பின்பு ரத்தாகி விடும் என்றும் இந்த நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

9. சொத்து பற்றிய ஆணை :- இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் கைப்பற்றப்படவில்லை, ஆகையால் அதை பற்றிய உத்தரவு எதுவுமில்லை.

இந்த தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் பிழைகள் நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17 ஆம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய என்னால் பகிரப்பட்டது.

B VIDHYA

Digitally signed by B VIDHYA
Date: 2026.02.17 18:30:36 +0200

நீதித்துறை நடுவர்,

செஞ்சி

**பின் இணைப்பு:-**

**அரசு தரப்பு சாட்சிகள்:-**

அ.சா.1 கிருஷ்ணமூர்த்தி (புகார்தாரர்)
அ.சா.2 உலகநாதன்
அ.சா.3 இந்துமதி
அ.சா.4 பச்சைமுத்து
அ.சா.5 சக்கரவர்த்தி
அ.சா.6 ரவி
அ.சா.7 தாகூர் (மருத்துவர்)
அ.சா.8 ஆறுமுகம் (உதவி ஆய்வாளர்)

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:-**

அ.சா.ஆ.1 புகார் மனு.

அ.சா.ஆ.2 பார்வை மகசரிலுள்ள 1 வது கையொப்பம்.

| | |
|---|---|
| அ.சா.ஆ.3 | அ.சா.2-ன் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று. |
| அ.சா.ஆ.4 | அ.சா.3-ன் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று. |
| அ.சா.ஆ.5 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.6 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.7 | மாதிரி வரைபடம் |

**அரசு தரப்பு சான்று பொருட்கள் :** - இல்லை

**எதிரிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்** :- இல்லை

**எதிரிகள் தரப்பு சான்றுபொருள் :** - இல்லை.

B VIDHYA Digitally signed by B VIDHYA Date: 2026.02.17 18:30:46 +0200

நீதித்துறை நடுவர்,

செஞ்சி

**குறிப்பு-**

1. வழக்கின் முடிவு சம்மந்தப்பட்ட காவல் துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

2. எந்த ஒரு சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி விசாரிக்கப்படவில்லை.

3. விசாரணை காலத்தில் எதிரிகள் பிணையில் இருந்தார்கள்.